கேருபீன் சேராபீன்கள் ஓய்வின்றி
உம்மை போற்றுதே
பூலோக திருச்சபை எல்லாம்
ஓய்வின்றி உம்மை போற்றிட -(2)

நீர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர்
எங்கள் பரலோக ராஜாவே
இந்த வானம் பூமியிலுள்ளோர்
யாவும் உந்தன் நாமத்தை
உயர்த்தட்டுமே -(2)

பூமியனைத்திலும் உந்தன்மகிமை
நிறைந்து வழிகின்றதே
ஆலயத்திலும் உந்தன் மகிமை-2
அலையலையாய் அசைகின்றதே
துதிகன மகிமைக்கு பாத்திரர்
எல்லாம் புகழும் உமக்குத்தானே-2

நீர் பரிசுத்தர்

வானம் உமது சிங்காசனம
பூமி உந்தன் பாதபடி
நாங்கள் உந்தன் தேவாலயம்
நீர் தங்கும் தூயஸ்தலம் -2
சகலமும் படைத்த என் தேவா
நீர் நித்திய சிருஸ்டிகரே -2

நீர் பரிசுத்தர்

பரலோகத்தில் உம்மையல்லா
யார் உண்டு தேவனே
பூலோகத்தில் உம்மைத்தவிர
வேறொரு விருப்பம் இல்லை -2
எங்கும் உம்மோடு வாழ
எம்மை உமக்காய்
தெரிந்தெடுத்தீர் -2 நீர் பரிசுத்தர்